நூறு சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி துண்டுப் பிரசுரம் வழங்கல்

அரியலூர், மார்ச் 30: அரியலூர் மாவட்டத்துக்குள்பட்ட அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டப்பேரவைத் தொகுதிகளில் 100 சதவீதம் வாக்களிப்பது தொடர்பாக பொதுமக்களிடம் திங்கள்கிழமை துண்டுப் பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அரியலூர் கடைவீதிகளில் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்போம் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொதுமக்களுக்கு கோட்டாட்சியர் த.பிரேமி, வட்டாட்சியர் தேவகி மற்றும் அலுவலர்கள் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதேபோல், ஜெயங்கொண்டம் பகுதியில் கோட்டாட்சியர் மனோகரன், வட்டாட்சியர் சுசீலா மற்றும் வருவாய் துறையினர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அரியலூரில் அதிமுக வேட்பாளர் அறிமுகக் கூட்டம்

அரியலூர், மார்ச் 30: அரியலூரிலுள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் அதிமுக வேட்பாளர் அறிமுகக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, அதிமுக மாவட்டச் செயலரும், வேட்பாளருமான தாமரை எஸ்.ராஜேந்திரன் தலைமை வகித்து, கடந்த அதிமுக ஆட்சியில் அரியலூர் தொகுதியில் செய்த சாதனைகளை எடுத்துரைத்தார். முன்னதாக அதிமுக மாவட்ட அவைத் தலைவர் ராமஜெயலிங்கம், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் இளவரசன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் இளவழகன், பாஜக மாவட்டத் தலைவர் பரமேஸ்வரி, அமமுக மாவட்டச் செயலர் வடிவேல், ஐஜேகே மாவட்டத் தலைவர் வெற்றி, தமாகா மாநில நிர்வாகி எஸ்.ஆர்.எம்.குமார் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழத்துரை வழங்கினர். நிறைவாக அதிமுக நகரச் செயலர் ஏ.பி.செந்தில் நன்றி கூறினார்.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
திண்டுக்கல் மாவட்டம்
தேர்தல் அவசரம்
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
(வாக்குச் சாவடி எண்ணுகை மையங்களில் பாதுகாப்பு தடுப்புகள் மற்றும் விளக்குகள் அமைத்தல்)
(திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.865/2026/அ3 நாள்: 23.03.2026)

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. திண்டுக்கல் மாவட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்களால் சிப்பம் வாரியாக திண்டுக்கல் மாவட்ட சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச் சாவடி எண்ணுகை மையங்களில் பாதுகாப்பு தடுப்புகள் மற்றும் விளக்குகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள மின்னணு முறையில் (E-Tender) ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக 31.03.2026 முதல் 07.04.2026 வரையிலான காலத்திற்குள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்கள் சமர்ப்பிக்க, பதிவிறக்கம் செய்ய, திறக்க நாள் மற்றும் நேரம்:
   (i) மின்ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 07.04.2026 பி.ப. 3.00 மணி வரை
   (ii) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 07.04.2026 பி.ப. 4.00 மணி முதல்

திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திண்டுக்கல்
செ.ம.தொ.இ.1516/ஒப்பந்தப்புள்ளி/2026

Repco Home Finance
ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
புதுக்கோட்டை கிளை: T.S.எண்.4273, தெற்கு 3வது தெரு
(நூர் மஹால் எதிரில்) புதுக்கோட்டை-622001

இ - ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்தினை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்தினை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI ACT) -இன் கீழ் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் கம்பெனியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை விற்பனை செய்தல்

கடன்தாரர்: Mr.G.பாலகிருஷ்ணன், S/o.Mr.கணேசன் மற்றும் சக-கடன்தாரர்: Mrs.B.கோமதி, W/o.Mr.G.பாலகிருஷ்ணன் ஆகியோர் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை கிளையில் கீழ்க்கண்ட அசையா சொத்தினை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளனர். நிறுவனமானது கடன் கணக்கு எண். AHL10040144001985-ன் கீழ் கடன் தொகையான 23.06.2025 அன்றுள்ளபடி ₹ 40,69,595/-முதல் வட்டி, இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு SARFAESI-சட்டம் 2002 பிரிவு 13(2)-ன் கீழ் 25.06.2025 அன்று மேற்கண்டவர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பியது.

கடன்தாரர் & சக-கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்டுள்ள நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் நிறுவனமானது கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்தினை சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் 27.10.2025 அன்று சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளது.

இதனை தொடர்ந்து, சொத்தை ஈடாக பெற்றிருக்கும் கடன் கொடுத்தவரான (Secured Creditor) ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனமானது கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமான சொத்துக்களை "எங்கே அமைந்துள்ளதோ அங்கேயே அப்படியே" என்ற நிலையிலும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற வகையிலும் ("as is where is" & "as is what is" condition) SARFAESI ACT 2002 பிரிவு 13(4)-ன் படியும் சொத்து மீதான கடனீட்டு உரிமை (அமலாக்கம்) விதிமுறைகள், 2002, விதி எண் 8 & 9-ன் படியும் விற்பனை செய்ய முடிவெடுத்து கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது. கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன் கணக்கு எண். AHL10040144001985 -ன் கீழ் 17.03.2026 அன்றுள்ளபடி ₹ 44,53,634/-

இ-ஏல தேதி & நேரம்: 06.05.2026, காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 வரை
விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட கால வரையற்ற நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்
இ-டெண்டரை சமர்பிக்கும் கடைசி நாள் & நேரம்: 05.05.2026 மாலை 4.00 மணிக்கு

அசையா சொத்து விபரம்: புதுக்கோட்டை பதிவு மாவட்டம், ஆலங்குடி சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, ஜமீபேட்டை கிராமம், அதன் சர்வே எண்கள் பின்வருமாறு

வ.எண்	பழைய சர்வே	ஹெக்டேர்	வகை	புதிய சர்வே எண்கள்	வ.எண்	பழைய சர்வே	ஹெக்டேர்	வகை	புதிய சர்வே எண்கள்
1	10-2	0.33.5	நஞ்சை	10-2	11	10-16	0.07.5	நஞ்சை	10-16
2	10-9	0.22.5	நஞ்சை	10-9	12	10-17	0.06.0	நஞ்சை	10-17
3	10-10	0.05.5	நஞ்சை	10-10	13	10-18	0.11.5	நஞ்சை	10-11
4	10-11	0.05.5	நஞ்சை	10-11	14	10-19	0.03.5	நஞ்சை	10-19
5	10-12	0.05.5	நஞ்சை	10-12	15	10-20	0.04.0	நஞ்சை	10-20
6	10-13	0.39.5	நஞ்சை	10-13	16	13-1A	0.18.5	நஞ்சை	10-1
7	10-14A	0.07.5	நஞ்சை	10-14	17	13-1B	0.08.5	புஞ்சை	13-1s
8	10-14B	0.06.0	நஞ்சை	10-14	18	13-1C	0.12.5	புஞ்சை	13-1
9	10-14C	0.06.0	நஞ்சை	10-14	19	13-1D	0.11.5	புஞ்சை	13-1
10	10-15	0.07.5	நஞ்சை	10-15	20	13-1E	0.13.0	புஞ்சை	13-1
					21	13-1F	0.45.0	புஞ்சை	13-1

மொத்த பரப்பு ஹெக்டேர் 2.80.5 அல்லது 6.97 ஏக்கர் நிலங்கள் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு அவை ஸ்ரீ நாமபுரீஸ்வரி நகர் என பெயரிடப்பட்டு இதில் மனை எண்.61 பகுதி & 60 என்னும் முகவரியில் 3162 சதுர அடி அல்லது 293.75 சதுர மீட்டர் நிலம், அதிலுள்ள கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், அதனுடன் EB இணைப்பு எண்.06159001856, சொத்து வரி மதிப்பீடு எண்.1/144 மற்றும் அனைத்து கதவுகள், ஜன்னல்கள், பொருத்துதல்கள், டெபாசிட், கிணறு, HP மோட்டார் உட்பட. மனை எண்.61 பகுதியின் பரப்பு 1362 சதுர அடி அதன் அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 22.7 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 22.7 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்: 60 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம்: 60 அடி மொத்தம் 1362 சதுர அடி மற்றும் மனை எண்.60-ல் உள்ள அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 30 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 30 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்: 60 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம்: 60 அடி மொத்தம் 1800 சதுர அடி. இரண்டு மனை எண்கள்.61 பகுதி & 60-ல் உள்ள மொத்த பரப்பு 3162 சதுர அடி அல்லது 293.75 சதுர அடி அதன் எல்லைகள்: வடக்கு: கிழக்கு மேற்கு 15 அடி அகல ரோடு, தெற்கு: மனை எண்.50 & 51, கிழக்கு: மனை எண்.59, மேற்கு: சமதியின் மனை எண்.61 பகுதி. இந்த சொத்தானது சர்வே எண்கள்.10/9, 10/20 & 13/1F, தற்போது, பட்டா எண்.295 படி, சர்வே எண்கள்.13/1F2, 10/20A3 & 10/9C-ல் உள்ளது.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 65,19,000/- EMD ₹ 6,51,900/- குறைந்தபட்ச ஏல உயர்வுத்தொகை ₹ 65,000/-

இ-ஏல நடைமுறைக்கு தொடர்புகொள்ள வேண்டிய நபர்: M/s. C1 India Pvt.Ltd., Mr.பிரபாகரன் – 74182 81709.
சொத்துக்களை பார்வையிட, ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள், கிளை மேலாளர், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை கிளை தொடர்பு எண்கள். 04322-221635 & 94443 94917 என்ற எண்ணில் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

தேதி: 19.03.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

கரூர் தொகுதி அதிமுக வேட்பாளர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மனு தாக்கல்

கரூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், கோட்டாட்சியருமான சு.சத்திய பால கங்காதரனிடம் திங்கள்கிழமை வேட்பு மனு தாக்கல் செய்த அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர். உடன் முன்னாள் அமைச்சர் ம.சின்னசாமி, பாஜக மாவட்டத்தலைவர் வி.வி.செந்தில்நாதன் உள்ளிட்டோர்.

கரூர், மார்ச் 30: கரூர் பேரவைத் தொகுதி அதிமுக வேட்பாளர் எம்.ஆர். விஜயபாஸ்கர் திங்கள்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தார்.

முன்னதாக கட்சி அலுவலகத்தில் இருந்து மாநில எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் பசுவைசிவசாமி, மாவட்ட அவைத்தலைவர் எஸ்.திருவிகா மற்றும் பாஜக மாவட்டத்தலைவர் வி.வி.செந்தில்நாதன், பாமக மாவட்டச் செயலாளர் புகழூர் சுரேஷ் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகளும், கிருஷ்ணராயபுரம் அதிமுக வேட்பாளர் மருத்துவர் திவ்யா, குளித்தலை வேட்பாளர் கருணாகரன், அரவக்குறிச்சி வேட்பாளர் எம்.ஆர்.கே செல்வகுமார் உள்ளிட்டோர் ஊர்வலமாக புறப்பட்டனர். பிற்பகல் 12.48 மணிக்கு கரூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரும், கோட்டாட்சியருமான சு. சத்திய பால கங்காதரனிடம் எம்.ஆர். விஜயபாஸ்கர் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். அவருக்கு மாற்று வேட்பாளராக உறவினர் கவின் மனு தாக்கல் செய்தார். வேட்புமனு தாக்கலின்போது முன்னாள் அமைச்சர் ம.சின்னசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

சொத்து மதிப்பு விவரம்: வேட்பு மனுவில், எம்.ஆர்.விஜயபாஸ்கர் பெயரில் அசையும் சொத்து- ரூ.4, 33, 90,321, அசையா சொத்து ரூ. 1,40,74,853 உள்ளதாகவும், மனைவி விஜயலட்சுமி பெயரில் அசையும் சொத்து ரூ.5, 39, 22, 047, அசையா சொத்தாக ரூ.2, 12, 34, 072 உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

பெரம்பலூரில் ஏப். 6–இல் எடப்பாடி கே.பழனிசாமி பிரசாரம்

பெரம்பலூர், மார்ச் 30: அதிமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து, பெரம்பலூரில் ஏப். 6-ஆம் தேதி அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே. பழனிசாமி தேர்தல் பிரசாரம் மேற்கொள்கிறார்.

ஏப். 6-ஆம் தேதி பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய சட்டப்பேரவைத் தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து, அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே. பழனிசாமி தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார். இதற்காக, பெரம்பலூர் அருகேயுள்ள கவுள்பாளையத்தில் பிரசார பொதுக்கூட்டம் நடைபெறவுள்ள பகுதியில் பூமிபூஜை விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

அரியலூர் மாவட்டச் செயலரும், வேட்பாளருமான தாமரை எஸ். ராஜேந்திரன், பெரம்பலூர் மாவட்டச்செயலரும், வேட்பாளருமான இரா. தமிழ்ச்செல்வன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில், முன்னாள் மக்களவை உறுப்பினர் ஆர்.பி.மருதராஜா, குன்னம் தொகுதி ஐஜேகே வேட்பாளர் சரண்யா, அதிமுக நிர்வாகிகள் எம்.என். ராஜாராம், எம். வீரபாண்டியன், செல்வகுமார், ஆர். ராஜபூபதி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் முதல்நாளில் 6 பேர் வேட்பு மனு தாக்கல்

பெரம்பலூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மு. அனிதாவிடம் திங்கள்கிழமை வேட்பு மனு அளித்த நாம் தமிழர் கட்சி வேட்பாளர் இரா. ஜான்சிராணி.

பெரம்பலூர், மார்ச் 30: பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர், குன்னம் ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிட நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட 6 பேர் திங்கள்கிழமை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தனர்.

ஏப். 23-ஆம் தேதி தமிழக சட்டப்பேரவைத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மார்ச் 30 முதல் ஏப். 6-ஆம் தேதி வரையிலும் வேட்பு மனு தாக்கல் நடைபெறுகிறது.

அதன்படி, பெரம்பலூர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் இரா. ஜான்சிராணி (43) ஏர் கலப்பையை தோளில் சுமந்து, அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்கள் மற்றும் தனது ஆதரவாளர்களுடன் ஊர்வலமாக வந்தார்.

பின்னர், கோட்டாட்சியரகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் மு. அனிதாவிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்து உறுதிமொழி ஏற்றார்.

தொடர்ந்து, மாற்று வேட்பாளரான லாடபுரத்தைச் சேர்ந்த கவிதா என்பவரும் வேட்புமனு தாக்கல் செய்தார். மேலும், இத் தொகுதியில் போட்டியிட சுயேச்சை வேட்பாளர் பெரம்பலூர் நகராட்சிக்குள்பட்ட துறைமங்கலத்தைச் சேர்ந்த புனிதராஜ் (50), வ.கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் (48) ஆகியோர் பெரம்பலூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மு. அனிதாவிடம் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

குன்னம் தொகுதியில்: குன்னம் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ரா. கீர்த்திவாசன் (27), தனது ஆதரவாளர்களுடன் ஏர், கலப்பை மற்றும் நெற்கதிர்களுடன் ஊர்வலமாகச் சென்றனர். தொடர்ந்து, தேர்தல் நடத்தும் அலுவலர் ந. சக்திவேலிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அக் கட்சியின் மாற்று வேட்பாளராக குன்னம் வட்டம், சிறுகுடல் கிராமத்தைச் சேர்ந்த ராமர் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

பெரம்பலூர் சட்டப்பேரவைத் தொகுதியில் 4 பேரும், குன்னம் சட்டப்பேரவைத் தொகுதியில் 2 பேரும் என மொத்தம் 6 பேர் திங்கள்கிழமை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தனர்.

கரூர் மாவட்டத்தில் ஒரே நாளில் 28 பேர் வேட்பு மனு தாக்கல்

கரூர், மார்ச் 30: கரூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை தொடங்கிய வேட்பு மனு தாக்கல் நிகழ்ச்சியில் மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளிலும் ஒரே நாளில் அதிமுக, நாம் தமிழர்கட்சி வேட்பாளர்கள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் என மொத்தம் 28 பேர் மனு தாக்கல் செய்தனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு திங்கள்கிழமை வேட்புமனு தாக்கல் தொடங்கியது. ஏப்.6–ஆம் தேதி வரை நடைபெறும் வேட்பு மனு தாக்கலில் வேட்பாளர்களிடம் வேட்புமனுக்களை பெறும் வகையில் திங்கள்கிழமை அலுவலர்கள் தயார்நிலையில் இருந்தனர்.

முன்னதாக வேட்புமனு தாக்கல் செய்ய வரும் வேட்பாளரின் வாகனத்துக்கு மட்டும் மனு தாக்கல் செய்யும் இடம் வரை அனுமதியளிக்கப்பட்டிருந்தது. மற்ற வாகனங்கள் 100 மீட்டருக்கு வெளியே நிறுத்துமாறு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த துணை ராணுவப்படையினர் அறிவுறுத்தினர். மேலும் மனுதாக்கல் செய்யும் இடத்தில் இருந்து 100 மீ. தொலைவில் சாலையின் இருபுறமும் தடுப்பு வேலி அமைக்கப்பட்டு, பாதுகாப்புப் பணியில் துணை ராணுவத்தினர் மற்றும் உள்ளூர் போலீஸார் ஈடுபட்டனர். மேலும் வேட்புமனு தாக்கல் செய்யும் அலுவலகத்துக்கு வேட்பாளருடன் 5 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

முதல்நாளான திங்கள்கிழமை கரூர் தொகுதிக்கு கோட்டாட்சியர் அலுவலகத்தில்நடைபெற்றவேட்புமனுதாக்கல் நிகழ்ச்சியில் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மருத்துவர் ரெ.கருப்பையா உள்ளிட்ட 14 பேரும், அரவக்குறிச்சி தொகுதியில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மருத்துவர் நரேன் உள்பட 2 பேரும், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வை.சத்யா உள்பட 3 பேரும், குளித்தலை தொகுதியில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் பொ. செல்வகுமார் உள்பட 9 பேரும் என மொத்தம் திங்கள்கிழமை ஒரே நாளில் 28 பேர் மனு தாக்கல் செய்தனர்.

IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்
IDFC FIRST Bank
(முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட் ஆக இருந்து, பின்னர் IDFC வங்கி லிமிடெட் உடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது)
பெருநிறுவன அடையாள எண்: L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8ஆவது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600031.
தொ.பே.: +91 44 4564 4000 | தொலைநகல்: +91 44 4564 4022.

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பு

கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக் கடன்தாரர்கள் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்டிடம் (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட்-ஆக இருந்து, பின்னர் IDFC வங்கி லிமிடெட் உடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) கீழே குறிப்பிட்டுள்ள ஈட்டுறுதி செய்யப்பட்ட கடன்களைப் பெற்றுள்ளனர். கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக் கடன்தாரர்கள் ஆகியோரின் கடன்கள் உரிய சொத்துக்களை அடமானம் வைத்து ஈடு செய்யப் பெற்றுள்ளன. கடன் ஒப்பந்தங்களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை அவர்கள் சரியாகக் கடைப்பிடிக்கத் தவறியதாலும் கடனைச் சரிவரத் திருப்பிச் செலுத்தாததாலும் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி அவர்களின் கடன்கள் செயல்படாச் சொத்தாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்-க்கு (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட்-ஆக இருந்து, பின்னர் IDFC வங்கி லிமிடெட் உடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) செலுத்தவேண்டிய தொகைகள் தொடர்புடைய அறிவிப்புகளின்படி பின்வரும் அட்டவணையில் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் அவற்றுக்கான வட்டியும் செலுத்தப்பட வேண்டும். இந்த வட்டியானது உரிய நாட்களிலிருந்து ஒப்பந்த விகிதப்படி கணக்கிடப்படும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன் வகை	கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள் பெயர்	பிரிவு 13(2)-இன் படி அறிவிப்பு நாள்	பிரிவு 13(2)-இன் அறிவிப்புப்படி நிலுவைத்தொகை
1	108745882	வீட்டுக் கடன்	1. மரியாஅலெக்சாண்டர் A 2. சவரிஅந்தோணியம்மாள் A	26.02.2026	இந்திய ரூபாய். 5,18,054.44

சொத்து முகவரி: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அமைவிடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவரங்குறிச்சி சார்பதிவு அலுவலக வட்டாரம், மருங்காபுரி வட்டம், கல்லக்காம்பட்டி ஊராட்சி, வெங்கட்நாயக்கன்பட்டி கிராமம், தமிழ்நாடு - 621314. பட்டா எண்.69, நத்தம் சர்வே எண்.213/4, பரப்பளவு 00247 சதுர மீட்டர் அதாவது, 2659 சதுர அடி கொண்ட நிலம் மற்றும் இதன் அனைத்து வசதிகளும் உட்பட. எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு - சாலை, மேற்கு - சவரிமுத்து அவர்களின் சொத்து, வடக்கு - அந்தோணிராஜ் அவர்களின் வீடு, தெற்கு - பொதுக் கிணறு.

IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்-க்கு (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட்-ஆக இருந்து, பின்னர் IDFC வங்கி லிமிடெட் உடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) செலுத்த வேண்டிய தொகைகளை மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி அந்தந்த நாட்களிலிருந்து ஒப்பந்த விகிதப்படியான வட்டியுடனும் செலவினங்கள், கட்டணங்கள் முதலானவற்றுடனும் இந்த அறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு நீங்கள் இதன் மூலம் அழைக்கப்படுகிறீர்கள். தவறினால் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்-க்கு (முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட்-ஆக இருந்து, பின்னர் IDFC வங்கி லிமிடெட் உடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது) வர வேண்டிய தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சொத்துக்கள் மீது கீழே கையொப்பமிட்டுள்ளவர் SARFAESI சட்டம், பிரிவு 14 மற்றும் பிரிவு 13(4)-இன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி வரும். மேலும் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13)-இன்படி கடனீட்டுச் சொத்தை விற்க / குத்தகைக்கு விட அல்லது இது போன்ற வேறு எவ்வகையிலும் பெயர் மாற்றம் செய்ய நீங்கள் தடை செய்யப்பட்டுள்ளீர்கள்.

ஒம்/-
அதிகாரபூர்வ அலுவலர்
IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்
(முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெட் ஆக இருந்து, பின்னர் IDFC வங்கி லிமிடெட் உடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது)
நாள் : 31.03.2026
இடம் : திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு

தேர்தல் பணிபுரியும் காவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்

அரியலூர், மார்ச் 30: அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்திலுள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில், தேர்தலில் பணிப்புரியும் காவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஷ்வேஷ் பா.சாஸ்திரி தலைமை வகித்து, வேட்புமனு தாக்கல் செய்யும் போது வேட்பாளர்களுடன் 4 பேரை மட்டும் அனுமதிப்பது, 100 மீட்டருக்கு அப்பால் மற்றவர்களை நிறுத்தி வைப்பது.

பிரசாரத்தின் போது பிரச்னை மற்றும் போக்குவரத்து பாதிப்பு ஏற்படாமல் எவ்வாறு பார்த்துக் கொள்வது, வாக்குப்பதிவு அன்று வாக்குச் சாவடி மையங்களுக்கு அருகாமையில் வாக்கு சேகரிக்க அனுமதியில்லை என்பதை கட்சியினரிடம் வலியுறுத்துவது, தேர்தல் நிலையான கண்காணிப்பு குழு, பறக்கும் படையினருக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது என்பன உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் மனு தாக்கல்

அரியலூர் தேர்தல் நடத்தும் அலுவலர் த.பிரேமியிடம் திங்கள்கிழமை மனு தாக்கல் செய்த நாம் தமிழர் கட்சி வேட்பாளர் தே.புகழேந்தி.

அரியலூர், மார்ச் 30: அரியலூர் சட்டப் பேரவைத் தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் தே.புகழேந்தி, தேர்தல் நடத்தும் அலுவரும், கோட்டாட்சியருமான த.பிரேமியிடம் திங்கள்கிழமை வேட்பு மனு தாக்கல் செய்தார்.

முன்னதாக அவர், கட்சி நிர்வாகிகளுடன் ஒற்றுமைத் திடலில் இருந்து கோட்டாட்சியர் அலுவலகம் வரை ஊர்வலமாக வந்து மனு தாக்கல் செய்தார்.

இதேபோல், ஜெயங்கொண்டம் சட்டப் பேரவைத் தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ரேவதி, வட்டாட்சியர் ஆனந்தவேலிடம் மனு தாக்கல் செய்தார்.

சில்லறை காசுகளுடன் வேட்பாளர் மனு தாக்கல்: அரியலூர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் நாடாளும் மக்கள் கட்சி வேட்பாளர் தங்க.சண்முகசுந்தரம், திங்கள்கிழமை வேட்பு மனு தாக்கல் செய்தார்.

இவர், வைப்புத் தொகைக்காக மக்களிடம் யாசகமாக பெற்ற ரூ.10 ஆயிரத்தை சில்லறை காசுகளாக எடுத்து வந்து, அரியலூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், கோட்டாட்சியருமான த.பிரேமியிடம் மனு தாக்கல் செய்து விட்டு, உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

மனுவை பெற்றுக் கொண்ட கோட்டாட்சியர் த.பிரேமி, அவர் வழங்கிய வைப்புத் தொகையை, சக அலுவலர்களிடம் கொடுத்து சரி பார்க்க சொன்னார். அலுவலர்கள் அரை மணி நேரம் சில்லறை காசுகளை எண்ணி முடித்து சரியாக இருப்பதாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தெரிவித்தனர். அதன் பின்னர் வேட்பாளராக போட்டியிடும் தங்க. சண்முகசுந்தரம், தேர்தல் நடத்தும் அலுவலர் வழங்கிய அத்தாட்சி கடிதங்களை பெற்றுக் கொண்டு சென்றார்.

சில்லறை காசுகளை எண்ணி முடிக்க நேரமானதால், வேட்புமனு தாக்கல் செய்ய வந்திருந்த நாம் தமிழர் கட்சி வேட்பாளர் புகழேந்தி சிறிது நேரம் காத்திருந்து வேட்பு மனு தாக்கல் செய்தார்.

பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
Trust Empowered by Innovation

பேங்க் ஆப் பரோடா
பெரம்பலூர் கிளை – புதிய வார்டு எண்.11, வெங்கடேசபுரம், பெரம்பலூர்–621212.
போன் : 04328 225080 | 94892–05924
மின்னஞ்சல் : peratn@bankofbaroda.co.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம் அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் சுருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
M/s. ஹெல்த் மஷ்ரூம்ஸ், கதவு எண்.519/4, சோமாண்டபுத்தூர்–வடக்குமாதவி ரோடு, கீழக்கரை, எசனை, பெரம்பலூர் – 621 219. 1. திருமதி. சுகந்தி ஜான்பீட்டர் (உரிமையாளர்) எண்.6, தண்ணீர்பந்தல், இந்திரா நகர், இளம்பலூர், பெரம்பலூர் – 621212. 2. திரு. ஜான்பீட்டர் செபாஸ்டியன் (உத்தரவாதமளித்தவர்) எண்.6, தண்ணீர்பந்தல், இந்திரா நகர், இளம்பலூர், பெரம்பலூர் – 621212.	சார் பிணையத்திற்குள்ளான காலி நிலம் அமைந்த, பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலூகா, பெரம்பலூர் வடக்கு கிராமம், UDR சர்வே எண்.256/1 F, சர்வே எண்.390/1, மனை எண்.4 ன் வடபுறம் மற்றும் தென்புறப் பகுதி. பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலூகா, பெரம்பலூர் வடக்கு கிராமம், அயன் புஞ்சை பழைய சர்வே எண்.390/1, இதில் மொத்தம் ஏக்கர் 7.82 சென்டில், ஏக்கர் 0.35 சென்ட், UDR சர்வே எண்.256/1 ன்படி, மொத்தம் 0.14.0 ஏர்ஸ், இவை வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டதில், அதிலடங்கிய 2336¼ சதுரடி காலி மனை எண்.4, இதில் தென்கிழக்கில் 1093¾ சதுரடி நீங்கலாக, இனம்–1: கிழமேல் இருபுறமும் 30 அடி, தென்வடல் கிழபுறம் 40 அடி, மேற்புறம் 28¼ அடி, சேர்ந்த மொத்தம் 1023¾ சதுரடி (95.11 சதுர மீட்டர்) காலி மனையின் மனை எண்.4 ன் வடபுற பகுதிக்கு நான்கெல்லைகள் விபரம்: மனை எண்.5 க்குக் கிழக்கு, கௌசல்யா மற்றும் வரதராஜனுக்குச் சொந்தமான மனை எண்.1 க்கு மேற்கு, விஜயகுமார் மனைவி கோமதிக்குச் சொந்தமான மனைக்குத் தெற்கு, 2வது இனம் மற்றும் மனை எண்.4 ன் தென்புற பகுதிக்கு வடக்கு. இனம்–2: கிழமேல் இருபுறமும் 5 அடி, தென்வடல் இருபுறமும் 43¾ அடி, சேர்ந்த மொத்தம் 218¾ சதுரடி (20.32 சதுர மீட்டர்) காலி மனையின் மனை எண்.4 ன் மேற்புற பகுதிக்கு நான்கெல்லைகள் விபரம்: மனை எண்.5 க்குக் கிழக்கு, மனை எண்.4 ன் மீதமுள்ள கிழபுற பகுதிக்கு மேற்கு, இனம்–1 க்குத் தெற்கு, 20 அடி அகல கிழமேல் வழித்தடத்துக்கு வடக்கு. மேற்படி இரு இன மனையிடங்களுமாக மொத்தம் 1242½ சதுரடி காலி மனை (115.43 சதுர மீட்டர்).	26.03.2026 தேதியன்று, டெர்ம் லோன் GEN EMI – 34180600009643 டெர்ம் லோன் GEN EMI – 34180600009805 கேஷ் கிரெடிட் பொது– 34180500008599 சேர்ந்த மொத்த நிலுவை : ரூ.53,91,240.72 பின் வட்டி + சட்டப்படியான மற்றும் பிற செலவுகளுடன்	14.05.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.9,50,000/– 2. ரூ.95,000/– 3. ரூ.25,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	13.05.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : 04328 225080 & 70 94892–05924 / 9176060206 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 26.03.2026
இடம் : பெரம்பலூர்

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா